**முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

அசல் வழக்கு எண்.389/2019 இ.ம.எண்.
எஸ்.சி.ஓ.பி.எண். நி.வே.ம.எண்.

2025 ம் ஆண்டு மார்ச் மாதம் 18-ந் தேதி வாதி தரப்பு சாட்சியின் **வா.சா.1**-ன் வாக்குமூலம் 1989 ம் ஆண்டு 19 வது விதி ஏற்பாட்டின் படி திரு.ஜிதேந்திரா,பலகை எழுத்தர் என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | N.புவனேஸ்வரி | வட்டம் | : | |
| த/பெ. | : | | மாவட்டம் | : | |
| க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |

**வா.சா. 1: முதல் விசாரணை**:

நான் இவ்வழக்கின் வாதி வங்கியின் கிளை மேலாளர் ஆவேன். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகளை உண்மையென நேரில் அறிந்து கையெழுத்து செய்துள்ளேன். 21.07.2007 ம்தேதியிட்ட கல்விக்கடன் விண்ணப்பம் அசல் **வா.சா.ஆ.1.** 21.07.2007 ம் தேதியிட்ட வங்கியால் ஒப்புதல் செய்யப்பட்ட கடிதம் அசல் **வா.சா.ஆ.2.** 24.07.2007 ம் தேதியிட்ட கடனுறுதி சீட்டு அசல் **வா.சா.ஆ.3.** 24.07.2007 ம் தேதியிட்ட கடனுறுதி சீட்டு டெலிவரி கடிதம் அசல் **வா.சா.ஆ.4.** 24.07.2007 ம் தேதியிட்ட கல்விக்கடன் ஒப்பந்தம் அசல் **வா.சா.ஆ.5.** 24.07.2007 ம் தேதியிட்ட கல்விக்கடன் உத்திரவாத பத்திரம் அசல் **வா.சா.ஆ.6.** 17.06.2010 ம் தேதியிட்ட கடனை அங்கீகரித்தற்கான ஒப்புதல் அசல் **வா.சா.ஆ.7.** 19.05.2013 ம் தேதியிட்ட கடன் புதுப்பிப்புக் கடிதம் அசல் **வா.சா.ஆ.8.** 05.04.2016 ம் தேதியிட்ட கடனை அங்கீகரித்தற்கான ஒப்புதல் அசல் (3 எண்ணிக்கை) **வா.சா.ஆ.9.** 04.03.2013 ம் தேதியிட்ட கடனை செலுத்தக்கோரிய கோரிக்கை அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ.10.** மேற்படி அறிவிப்பு சார்வாகாமல் திருப்பப்பட்ட அஞ்சலக உறை அசல் (3 எண்ணிக்கை) **வா.சா.ஆ.11.** 23.10.2013 ம் தேதியிட்ட கடனை

செலுத்தக்கோரிய கோரிக்கை அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ.12**. மேற்படி அறிவிப்பு 2ம் பிரதிவாதிக்கு சார்வு செய்யப்பட்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் **வா.சா.ஆ.13.** மேற்படி அறிவிப்பு 1 மற்றும் 3ம் பிரதிவாதிக்கு சார்வாகமல் திருப்பப்பட்ட அஞ்சலக உறை அசல் (2 எண்ணிக்கை) **வா.சா.ஆ.14.** 19.03.2009 முதல் 26.03.2019 வரையிலான வங்கிக் கணக்கீட்டுப்பட்டியல் (சான்றிட்ட நகல்) **வா.சா.ஆ.15.** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**வா.சா.1 : பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை-**

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.